**ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்**

**வாசிக்க**: **ரோமர்** 12:14-21

ஏகசிந்தையாக இருங்கள் என்றால்..... ஒத்த உணர்வைத் தெரிவிப்பது ஆகும். அவர்களுக்காக, அவர்களுடன், அவர்கள் நிலையில் இருப்பது ஒத்த உணர்வாகும்.

நமது ஞாயிறு பள்ளியில் இருப்பவர்கள் மற்றும் சபையில் உள்ளவர்கள் அல்லது கிறிஸ்துவோடு வாழ்கிறவர்கள் அப்படிப்பட்டவர்களுடன் சந்தோஷப்படுகிறவர்களுடன் சந்தோஷப்படுங்கள். துக்கப்படுகிறவர்களுடன் துக்கப்படுங்கள். மகிழ்ச்சியாயிருக்கிறவர்களுடன் மகிழ்ச்சியாயிருங்கள். அழுகிறவர்களுடன் அழுங்கள். கொண்டாடுகிறவர்களுடன் கொண்டாடுங்கள். வேதனைப்படுகிறவர்களுடன் வேதனைப்படுங்கள். இதுதான் ஏகசிந்தையாக இருப்பதாகும். அதற்காக அவர்கள் தவறான, பாவமான காரியங்களுக்கு உடன்படக்கூடாது.

தேவன் ஒத்த உணர்வை உடையவராக இருக்கிறார். நான் உன்னுடைய உபத்திரவத்தைப் பார்க்கவே பார்த்தேன் நான் உன்னுடைய கூக்குரலைக் கேட்கவே கேட்டேன் நான் உன்னுடைய வேதனைகளை அறிந்திருக்கிறேன். இவைகளிலிருந்து நான் உன்னை விடுதலையாக்குவேன். யாத்திராகமம் 3:7,8. என்று வேதாகமம் சொல்லுகிறது.

இயேசு கிறிஸ்துவும் லாசருவின் மரணவேளையில் அவர்களுடன் சேர்ந்து கண்ணீர்விட்டார் என்று பார்க்கிறோம்.

நாமும் நமது ஞாயிறு பள்ளியில் இருப்பவர்கள் மற்றும் சபையில் உள்ளவர்கள் அல்லது கிறிஸ்துவோடு வாழ்கிறவர்களின் உணர்வுகளை அறிந்து ஒத்த உணர்வைத் தெரிவித்து, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். நான் எனக்கு என்னுடையது என்ற சுயநல சிந்தை அற்ற பிள்ளைகளாயிருப்போம்.

வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிசுத்தவான்கள் எல்லோரும் ஏகசிந்தையுள்ளவர்களாயிருந்தார்கள். கர்த்தர் உங்களையும் உபயோகப்படுத்த வேண்டுமா? ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்.

**கேள்விகள்**:

1. ஏகசிந்தையாக இருங்கள் என்றால் என்ன?

2. ஒத்த உணர்வு என்றால் என்ன?

3. நீங்கள் எப்படி ஒத்த உணர்வைத் தெரிவிப்பீர்கள்?